செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
மடல்-65 மே, 2026



தோழர்கள் அனைவருக்கும்
மே தின புரட்சிகர வாழ்த்துக்கள்



போராட்டங்களை வலுப்படுத்துவோம் - எதிர்ப்பை ஒருங்கிணைப்போம்
உரிமைகளுடன் கூடிய உழைப்பினை உறுதி செய்வோம்
உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் (WFTU) மே தின வாழ்த்து

கடந்து சென்ற காலத்தில் தொழிலாளர்கள் அனுபவித்த துன்பங்களையும் தியாகங்களையும் நினைவு கூர்வதற்கும், தொழிலாளர்கள் சுரண்டப்படுவதற்கு எதிரான போராட்டத்தை தொடர்வதற்கும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் உறுதியை புதுப்பிக்கும் சர்வதேச ஒற்றுமை தினமாக உலகத் தொழிலாளர்களால் மே தினம் கொண்டாடப்படுகிறது.



நாள்தோறும் எட்டு மணி நேரம் மட்டுமே உழைக்கும் நேரமாக உலகம் தீர்மானிக்க வேண்டும் என்பதை போராடிப் பெற முதலாளிகள் மற்றும் அதிகார சக்திகளை எதிர்த்து நடைபெற்ற வீரம் செறிந்த தொழிலாளர் புரட்சிகளில் இரத்தம் சிந்தி உயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நாள் மே நாள் ஆகும்.

சர்வதேச தொழிலாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள போர்க்குணமிக்க தொழிற்சங்கங்கள், 1886-ஆம் ஆண்டு சிகாகோவில் நடந்த தொழிலாளர் போராட்டத்தின் 140-வது ஆண்டு நிறைவை, இவ்வாண்டு மே தினத்தன்று நினைவு கூர்ந்து அனுசரிக்கின்றன.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, உலகெங்கிலும் உள்ள சுமார் 105 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், சர்வதேச தொழிற்சங்க அமைப்பான WFTU - உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம், இந்த ஆண்டு மே தினம், உலகத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், சமூக நீதியை சிதைக்கும் முயற்சிகள், போர்கள் மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு எதிராகவும் உலகெங்கிலும் இடைவிடாத போராட்டத்தை முன்னெடுக்கும் நாளாக அறிவித்துள்ளது.

வலிமை அமைப்பில் உள்ளது - நம்பிக்கை போராட்டத்தில் உள்ளது

1886-ஆம் ஆண்டு சிகாகோவில் போராடிய தொழிலாளர்களின் கோரிக்கைகள் இன்றளவும் பொருத்தமானவையாகவும் அவசியமானவையாகவும் இருக்கின்றன. முதலாளித்துவத்தின் நெருக்கடி ஆழமாகப் பரவி, சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆபத்தான முறையில் தற்காலத்திலும் விரிவடைந்து வருகின்றன. ஜனநாயக சுதந்திரங்களும் தொழிற்சங்க உரிமைகளும் உலகம் முழுவதும் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.



அதே நேரத்தில் ஏகாதிபத்தியப் போர்கள், அணு ஆயுதப் பேரழிவு அபாயம் ஆகியன உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் தொடர்ந்து நேரடி அச்சுறுத்தலாக உள்ளன என்பதை சர்வதேச நிகழ்வுகள் நாள்தோறும் உறுதிப்படுத்துகின்றன.

காசாவில் பாலஸ்தீனியர்கள் மீதான இனப் படுகொலை மற்றும் இஸ்ரேலிய அரசின் கற்பனைக்கு எட்டாத கொடூரம், அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானுக்கு எதிராக நடத்திவரும் கொலைகாரத் தாக்குதல், வெனிசுலா மீதான அமெரிக்காவின் படையெடுப்பு மற்றும் அந்நாட்டின் சட்டபூர்வமான ஜனாதிபதியின் கடத்தல், சோசலிச நாடான கியூபாவிற்கு எதிரான பயங்கரவாத அச்சுறுத்தல்கள் ஆகியவை, ஏகாதிபத்திய சக்திகளின் வஞ்சகம் மற்றும் மனிதாபிமானமற்ற தன்மையை அம்பலப்படுத்தியுள்ளன.



இராணுவச் செலவினங்கள் அதிவேகமாக அதிகரித்து வரும் நிலையில், NATO மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகள் இராணுவமயமாக்கலைத் தீவிரப்படுத்தி, போர்ப் பொருளாதாரத்தை ஒரு "வளர்ச்சிக்கான வழியாக" ஊக்குவிக்கின்றன. அதே சமயம், புதிய சிக்கன நடவடிக்கைகள், தனியார்மயமாக்கல் மற்றும் சமூக நலன்களைச் சிதைத்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் சாதாரண மக்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

அதன் விளைவாக, எரிசக்தி பற்றாக்குறை, பணவீக்கம் மற்றும் விலைவாசி உயர்வு ஆகிய நெருக்கடிகள் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்து அவர்களை வறுமையில் ஆழ்த்துகின்றது. தொழிலாளரின் ஊதியங்கள் தேக்கமடைந்துள்ள நிலையில், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் எரிசக்திப் பெருநிறுவனங்களின் இலாபங்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றது.

இந்தச் சூழ்நிலையின் விளைவாக, தொழிலாளி வர்க்கத்தின் மிகவும் நலிவடைந்த பிரிவினர், பெண் தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் ஆகியோர் தீவிரமான சுரண்டல், குறைந்த ஊதியம், வேலைப் பாதுகாப்பின்மை ஆகிய கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர்.

ஒற்றுமையும் போராட்டமும் தொழிலாளி வர்க்கத்தின் ஆயுதங்களாகும்

கணினி மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவின் புதிய சகாப்தம், தொழிலாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக, தொழிலாளரின் உழைப்பை மேலும் உறிஞ்சுவதற்கும், தொழிலாளர்களைக் கண்காணிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.



இவற்றின் காரணமாக ஊழியருக்கு பணிப் பாதுகாப்பின்மை, நிலையற்ற வேலை மற்றும் தொழிலுறவு பாதிப்பு ஆகியவை பரவலாகி வருகின்றன. அதே நேரத்தில், தொழிலாளரின் நியாயமான போராட்டங்களுக்கு எதிரான அரசு மற்றும் முதலாளிகளின் அடக்குமுறை தீவிரமடைந்து வருகிறது.

தொழிற்சங்கவாதிகள் துன்புறுத்தப்படுகிறார்கள், வேலைநிறுத்தங்கள் குற்றமாக்கப்படுகின்றன, மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் குறிவைக்கப்பட்டு, இனவெறி மற்றும் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (WFTU) கீழ்க்கண்ட கோரிக்கைகளை இந்த மே தினத்தில் பிரகடனப்படுத்துகின்றது:

- முழு உரிமைகளுடன் கூடிய ஊதிய உயர்வு மற்றும் கூட்டுத் தொழிலாளர் ஒப்பந்தங்கள்
- விலைவாசி உயர்வு மற்றும் பணவீக்கத்திற்கு எதிராக பயனுள்ள நடவடிக்கைகள்
- அனைவருக்கும் இலவச சுகாதாரம், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்தல்
- வேலை நேரக் குறைப்பு, நிலையான வேலை நேரங்களுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு
- டிஜிட்டல் தளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு
- அனைத்துப் பணியிடங்களிலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்
- தொழிற்சங்க உரிமைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்களுக்கு உத்திரவாதம்
- புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்பு மற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சம உரிமைகள்

அதிகாரவெறி கொண்ட ஏகாதிபத்திய நாடுகளின் போர்களிலும் ஆக்கிரமிப்புகளிலும் தொழிலாளர்களுக்கு எந்த ஆர்வமும் இல்லை. மாறாக, ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் ஒன்றிணைந்த போராட்டங்களின் மூலம் அவர்கள் அனைத்தையும் பெற முடியும்.

அடக்குமுறைகளுக்கு சமரசம் மற்றும் அடிபணிதலை நிராகரிக்குமாறு **WFTU** உலகத் தொழிற்சங்கங்களை இம்மேதினத்தில் கேட்டுக்கொள்கிறது. கூட்டுபேர ஒப்பந்தங்களால் நெறிப்படுத்தப்பட்ட, உரிமைகளுடன் கூடிய பணிச்சூழலை உறுதிப்படுத்த தொழிலாளி வர்க்கத்தின் ஆயுதங்களாக ஒற்றுமையும் உலகளாவிய வர்க்க உணர்வும் உள்ளன.

ஏகாதிபத்தியப் போர்களும் தலையீடுகளும் பாகுபாடுகளும் அற்ற, மனிதனால் மனிதன் சுரண்டப்படுவது இல்லாத ஒரு உன்னத உலகத்தை நோக்கிய போராட்ட நடவடிக்கைகளுக்கு இவ்வருட மே தினம் ஒரு துவக்கமாக அமையட்டும் என்று உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் மே தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

ஒற்றுமையின் அவசியம் உணர்வோம் - போராட்டங்களைத் தொடர்வோம்
அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மே தினச் செய்தி

ஒற்றுமை மற்றும் தியாகத்தின் அடையாளமாகத் திகழும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் சிவப்புக் கொடியை நாம் என்றென்றும் உயர்த்திப் பிடிப்போம் என்று உறுதிமொழி எடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமே மே தினம்.

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தொழிலாளர்களின் ஒற்றுமையின் அவசியத்தை இந்நாள் வலியுறுத்துகிறது. போதுமான மற்றும் நியாயமான ஊதியம் வழங்காமல் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கான தீவிர முயற்சிகள், தொழிற்சங்கங்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தல், வேலைப் பாதுகாப்பை மறுத்தல் போன்ற தாக்குதல்கள் அனைத்தும் முதலாளிகளின் இலாபத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் செய்யப்படுகின்றன.



துரதிர்ஷ்டவசமாக, அரசாங்கமும் அவர்களுக்கு மென்மேலும் பல்வேறு சலுகைகளை வழங்குவதோடு, அவர்களுக்குச் சாதகமாகவே செயல்படுகிறது. இத்தகைய தொழிலாளர் விரோத சட்டங்களை முறியடித்திட தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான நமது போராட்டங்களைத் தொடர்வோம் என்று உறுதிமொழி எடுப்பதற்கான ஒரு தருணமே மே தினம்.

ஒன்றிய அரசாங்கத்தால் எதேச்சாதிகாரமான முறையில் திணிக்கப்பட்ட சமீபத்திய புதிய தொழிலாளர் சட்டங்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் கடின உழைப்பால் வென்றெடுக்கப்பட்ட பல்வேறு உரிமைகளைப் பறிக்க முற்படுகின்றன.

முதலாளிகளும் பெருநிறுவனங்களும் தொழிலாளர்களைச் சுரண்டி மேலும் செல்வம் குவிப்பதற்காக, தொழிற்சங்கமயமாக்கலைக் கடினமாக்குவதும், தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை மழுங்கடிப்பதுமே இதன் நோக்கமாகும். இத்தகைய தீமை பயக்கும் சூழ்ச்சிகளை முறியடிக்க நமது முயற்சிகளைத் தீவிரப்படுத்துவோம் என்று உறுதிமொழி எடுப்பதற்கான ஒரு தருணமே மே தினம்.

இந்திய நாட்டில் பொதுத்துறை, நமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கி வந்தது. ஆனால் பொதுத்துறையை பலவீனப்படுத்தி சிதைக்கும் ஒன்றிய அரசின் கொள்கைகள் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை பாதித்து, வேலையின்மையும் மேலும் அதிகரித்து வருகிறது. பொதுத்துறையைப் பாதுகாப்போம் என்றும், நமது இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளுக்காகப் போராடுவோம் என்றும் உறுதிமொழி எடுப்பதற்கான ஒரு தருணமே மே தினம்

தனியார்மயமாக்கலை முறியடிக்க நமது பிரச்சாரத்தை விரிவுபடுத்துவோம்

வங்கித் துறையும் அன்றாடம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது. பொதுத்துறை வங்கிகள் தனியார்மயமாக்கப்படும் திட்டங்கள் தீவிரப்படுத்தப்படுகின்றன. தனியார்துறை வங்கிகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்கப்படுகின்றன. கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராமப்புற வங்கிகளை சீரழிக்கும் சட்டங்கள் ஒன்றிய அரசால் கொண்டுவரப் படுகின்றன.



ஆண்டுதோறும் அதிகரிக்கும் பெரு முதலாளிகளின் வாராக் கடன்கள் வசூலிக்கப்படாமல், பெரும் தள்ளுபடிகள் மூலம் அவை மறைக்கப்படுகின்றன. இந்தப் பகல் கொள்ளையின் சுமை சாமானிய மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தோள்களில் சுமத்தப்படுகிறது. பொதுத்துறை வங்கிகளைத் தனியார் மயமாக்கலில் இருந்து காப்பாற்றுவதற்கான நமது பிரச்சாரத்தை விரிவுபடுத்துவோம் என்று உறுதிமொழி எடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமே மே தினம்.

இன்றைய சவாலான காலங்களில், நமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்பட்ட பணி நிலைமையினை அடைவதற்கும் நமது தொழிற்சங்கங்கள் மட்டுமே உதவிடும் என்பதை நம் தோழர்கள் உணர்ந்திடவேண்டும்.

நமது அனைத்து தொழிற்சங்கங்களும், உறுப்பினர்களும் ஒற்றுமை மற்றும் போராட்டப் பாதையில் நமது உறுதியான அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தும் விதமாக மே தினத்தை சிறப்பாகக் கடைப்பிடிக்குமாறும், அனைத்து மையங்களிலும் நடைபெறும் மே தின நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் கலந்துகொள்ளுமாறும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய ஒன்றிய பாஜக அரசு

இரயில்வே துறையில் ஆட்குறைப்பு செய்ய திட்டம் - தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பு

இந்திய இரயில்வே துறையில் இரண்டு சதவீத பணியாளர்களை குறைக்க இரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல் ஊழியர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. சீர்திருத்தம் என்கிற பெயரில் பல்வேறு பொதுத்துறைகளை சீரழித்து வரும் ஒன்றிய அரசு, உலகின் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான ரயில்வே துறையையும் சீரழித்து அந்தத் துறையை கொஞ்சம் கொஞ்சமாக தனியாருக்கு தாரை வார்க்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியே இந்த ஆட்குறைப்பாகும்.



இந்திய ரயில்வே துறையில் சுமார் 14லட்சத்து 80ஆயிரம் பணியாளர்கள் உள்ள நிலையில், இந்த அறிவிப்பின் மூலம் சுமார் 29ஆயிரத்து 608 ஊழியர்கள் தங்கள் பணிகளை இழப்பர். மக்கள் நலனுக்கு எதிரான இந்த நடவடிக்கை இரயில் பயணிகளின் பாதுகாப்பினையும் கேள்விக்குறியாக்கும் என்று தொழிற் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய ஒன்றிய பாஜக அரசு, தற்பொழுது இரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்வது நாட்டு நலனுக்கு எதிரான செயலாகும். வேலையில்லா திண்டாட்டம் இந்திய நாட்டில் அதிகரித்துவரும் இன்றைய காலகட்டத்தில், இத்தகைய நடவடிக்கை இளைஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், விரக்தியையும், கோபத்தையும் உருவாக்கி உள்ளது.



வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதில் கவனம் செலுத்தாத ஒன்றிய பாஜக அரசு, ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது நாட்டின் இளைய தலைமுறையினரின் நலன்களுக்கும், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்கும் எதிரானதாகும். இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிடுவது மட்டுமல்லாமல், தற்காலிக அடிப்படை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அனைத்து ரயில்வே பணியாளர்களுக்கும் புதிய பணியிடங்களை உருவாக்கி நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்திட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

ஏற்கெனவே இந்திய ரயில்வேயில் 3.5 லட்சத்திற்கும் அதிகமான காலிப்பணியிடங்கள் உள்ளன. இந்தப் பணியிடங்களை நிரப்புமாறு தொடர்ந்து தொழிற் சங்கங்கள் வலியுறுத்தி வரும் நிலையில், ஆட்குறைப்பு நடவடிக்கையில் ரயில்வே வாரியம் இறங்கியுள்ளது ஊழியர்களை பெரும் கொந்தளிப்பில் ஆழ்த்தியுள்ளது.

போராடும் தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறையை கண்டித்து மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (CTUs) மற்றும் சம்யுக்த கிசான் மோர்ச்சா (SKM) கூட்டறிக்கை

மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் SKM விவசாயத் தொழிலாளர் அமைப்புகளின் கூட்டுக் கூட்டம் ஏப்ரல் 24 அன்று நடைபெற்றது. அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்த போதிலும், கடந்த 10 ஆண்டுகளாகப் பல மாநிலங்களில் குறைந்தபட்ச ஊதியம் திருத்தி அமைக்கப்படாதது, மற்றும் பெரும்பாலான தொழில் மையங்களில், ஒப்பந்த அடிப்படை அல்லது தற்காலிக அடிப்படை நியமனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், அடிப்படை வசதிகள் அற்ற, நிலையற்ற சூழலில் வாழும் புலம்பெயர் தொழிலாளர்களாக உள்ளனர் என்றும் அவர்கள் தொழிற்சங்கங்களை அமைக்க அனுமதிக்கப்படாது ஒன்றிய, மாநில அரசுகளால் துன்புறுத்தப்படுவது குறித்தும் இக்கூட்டத்தில், கவலை தெரிவிக்கப்பட்டது.



பீகாரில் உள்ள பருனி சுத்திகரிப்பு ஆலைப் பகுதி மற்றும் பானிபட் போன்ற தொழிற்சாலைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஒப்பந்தத் தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலை நாள், குறைந்தபட்ச ஊதியம், பணியிடப் பாதுகாப்பு ஆகிய கோரிக்கைகளுக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து சூரத்திலும் இதேபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி பிற மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பல ஆயிரம் தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினர்.

குறைந்தபட்ச ஊதிய வாரியத்தின் பரிந்துரையின்படி, குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தக் கோரி, ஹரியானாவின் மனேசரில் உள்ள தொழிலாளர்கள் தத்தமது தொழிற்சாலை வாயில்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு விரைவான தீர்வு காண, தொழிற்சங்கக் கூட்டுக் குழு மனேசரில் தொழிலாளர் துறை அதிகாரிகளுடன் கூட்டம் நடத்திய போதிலும், காவல்துறையினர் தொழிலாளர்கள் மீது தடியடி நடத்தி, நூற்றுக்கணக்கானோரைக் கைது செய்து, அவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்தனர்.

நொய்டாவில் உள்ள பல தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் குறைந்தபட்ச ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை, சமூகப் பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் ஆகியவற்றை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டபோது நூற்றுக்கணக்கானோர் கொடூரமான காவல்துறை நடவடிக்கைகளினால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, பிவாடி மற்றும் நீம்ரானாவில் உள்ள தொழிலாளர்களும் இதேபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சாலை வாயில்களில் போராட்டம் நடத்தியபோது காவல்துறையினருடன் சேர்ந்து குண்டர்களாலும் தாக்கப்பட்டனர். தொழிலாளர்களின் தன்னிச்சையான எழுச்சியில் தேசவிரோத சக்திகளுக்கும் பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருப்பதாக ஆளும் அரசுகளால் கூறப்படும் இந்தத் தவறான கட்டமைப்பை மத்திய தொழிற்சங்கங்கள் முற்றிலுமாக நிராகரிக்கின்றன.



தொழிற்சங்கங்களைக் கட்டுப்படுத்தி முடக்கும் வகையில் தொழிலாளர் சட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், தொழில்துறை அமைதிக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும், மேற்கு ஆசிய நிகழ்வுகளால் எரிபொருள் விலைகள் அதிகரித்திருப்பதாலும், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு முற்றிலும் தவறியதாலும், குறைந்த ஊதியத்தில் வாழ்வது கடினமாகி, தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களை நோக்கி பெருமளவில் புலம் பெயர்ந்து வருகின்றனர் என்று மத்திய தொழிற்சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இந்தச் சூழலில், மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, துறைசார் கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள், சம்யுக்த் கிசான் மோர்ச்சாவுடன் இணைந்து கீழ்க்கண்ட கோரிக்கைகளை அறிவித்துள்ளன:

- பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள ஊதிய உயர்வு, எட்டு மணி நேர வேலை நாள், வாராந்திர விடுப்பு மற்றும் பிற பணியிடப் பிரச்சினைகள் போன்ற சட்டப்பூர்வ உரிமைகள் கோரிப் போராடும் தொழிலாளர்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுவது அராஜகமானது.
- கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்வதோடு, சட்டவிரோத வழக்குகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அடிப்படை வாழ்வாதார வசதிகள் வழங்க வேண்டும்.
- 2015ம் ஆண்டிற்குப் பின் இதுகாறும் கூட்டப்படாத இந்தியத் தொழிலாளர் மாநாட்டை (ILC) உடனடியாகக் கூட்ட வேண்டும்
- விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையையும் (MSP), உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்முதலையும், பயிர் பாதிப்பிற்கான இழப்பீட்டையும் கொடுத்திட வேண்டும்.
- அமெரிக்காவுடன் நம் தேசிய நலன்களுக்குப் பாதகமான வர்த்தக ஒப்பந்தம் கூடாது.

அனைத்து முக்கிய கோரிக்கைகளும் நிறைவேறும் வரை விரிவான பேச்சு வார்த்தை நடத்துவதற்கும், அடுத்தகட்ட போராட்ட நடவடிக்கையைத் தீர்மானிப்பதற்கும் **2026,** மே **13** அன்று மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு புது தில்லியில் கூடுவதற்கு முடிவு செய்துள்ளது. தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஒற்றுமையைக் குறிக்கும் வகையில், சர்வதேச தொழிலாளர் தினமான மே **1** அன்று நடைபெறும் மே தின ஊர்வலங்களில் பங்கேற்குமாறு இந்தியா முழுவதிலுமுள்ள தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும், சம்யுக்த் கிசான் மோர்ச்சாவும், மத்திய தொழிற் சங்கங்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.



தொழிலாளர்கள், விவசாயிகள் அல்லது எந்தவொரு மக்கள் பிரிவினரின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காகப் போராடுவது அரசியலமைப்பு ரீதியான ஜனநாயக உரிமை என்றும் அதனை எந்தவொரு சக்தியும் தடைசெய்ய முடியாது என்றும் மத்திய தொழிற் சங்கங்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர் அமைப்புகளின் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

பல்வேறு தரப்பு மக்களுடைய அமைப்புகள் மற்றும் தொழிலாளர்களின் சங்கங்களுக்கு, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை எழுப்புவதற்கும், அவற்றை அடைவதற்கு போராடுவதற்குமான ஜனநாயக உரிமையை எந்தவொரு நாடும் தடை செய்யவோ அல்லது மறுக்கவோ உரிமை கிடையாது என்று மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர் அமைப்புகளின் கூட்டமைப்பு எச்சரிக்கையுடன் பிரகடனப்படுத்தி உள்ளது.





